Dr. S. RAMANATHAN Ph.D (Wesleyan University)
Retd. Principal College of Music, Madurai,
Es. Dean, Faculty, of Arts, University, Kerala
Hon. Director Research Tamil Isai Sangam, Madras.

---

ஜயதேவர் இயற்றிய கீத கோவிந்தம் வடமொழியில் சிறந்ததொரு காவியம்; மேலும் இசைக்கு ஒரு கருவூலமாகும். 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அக்காவியம் தென்னாடு முழுவதும் பரவி, சிறப்பாகத் தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் மிகவும் போற்றப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டு மார்கழி மாதம் நடக்கும் ராதா கல்யாண உற்சவத்தில் கீதகோவிந்தத்திலுள்ள பாடல்கள் (அஷ்டபதிகள்) பாடப் பெற்று வருகின்றன.

கண்ணன், ராதை, தோழி ஆகிய மூன்று பாத்திரங்கள் உடைய இக்காவியம் வடமொழியில் இருப்பதால் பெரும்பாலோர்க்கு அதன் பொருள் விளங்காது. அக்குறையை நீக்க, அதிலுள்ள 24 பாடல்களின் பொருள் விளங்கும்படி தமிழ் மொழியில் பாக்கள் புனைந்து “மாதவ கீதம்” என்ற நூல் வடிவில் வெளியிடப் பெறுவது மகிழ்ச்சிக்குரியது. இந்நூலை இயற்றியவர் ஸ்ரீமதி பட்டம்மாள் தண்டபாணி ஆவர். அவர் ஏற்கனவே பல அபூர்வ ராகங்களிலும், பிராசீன ராகங்களிலும் பல பாடல்கள் இயற்றி இசை உலகுக்குப் பரிசயமானவர்.

சொற்கள் எளிமையாகவும், இசையமைப்பு எளிதில் பாடக்கூடியதாகவும் இருப்பது வரவேற்கத்தக்கது. இந்நூலில் அஷ்டபதிகளின் இராகங்களையே பயன்படுத்தியுள்ளார்.

இது போன்ற முயற்சிகளை இசை உலகம் வரவேற்கும் என்று நம்புகிறேன்.